(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 32.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஒற்றோபர் 08, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0125 / '09

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஊழியர்களுக்கு காணிகளைக் கொள்வனவு செய்வதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் சலுகை வட்டி அடிப்படையிலான கடன் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா

(ii) அவ்வாறாயின் இக்கடன் திட்டத்தின் கீழ் எவ்வளவு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது,

(iii) இதன் கீழ் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை வங்கியினால் எவ்வளவு தொகை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது,

(iv) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் வெவ்வெறாக எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(ii) 2008ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது,

(iii) இவ்வாண்டில் எத்தனை பேருக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரச ஊழியர்களில் பெருந்தொகையானோருக்கு இக்கடனைப் பெற முடியா துள்ளதால் அநீதி ஏற்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0275 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டு அறிக்கைகளின் பிரகாரம் அரசாங்க கடமைகளுக்கும் தனிப்பட்ட அலுவல்களுக்கும் வாகனங்களைப் பயன்படுத்திய புகையிரத திணைக்களத்தைச் சேர்ந்த 4 பேர் 2006 யூலை 14ஆம் திகதிய 11/2006ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்திற்கு முரணாக தமக்குரிய எரிபொருள் வரையறையைக் கடந்து பயன்படுத்தியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 6402 லீட்டர் எரிபொருளை மேலதிகமாகப் பயன்படுத்தியுள்ள மேற்படி உத்தியோகத்தர்கள் யார்,

(ii) இவர்களின் கடமைகள் யாவை,

(iii) வரையறையைக் கடந்து பயன்படுத்தியுள்ள எரிபொருளின் நிதி ரீதியிலான பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0288/ ' 09

3.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்குப் பதவியுயர்வு பெற்ற புகையிரத நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. சி. டப்ளியு. ஆர். பர்னாந்து உள்ளிட்ட சிலருக்கு 7 சம்பள ஏற்றங்களில் முரண்பாடுள்ளதென்பதையும்,

(ii) இற்றைவரை அதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 1994.02.11ஆம் திகதிய 11/94ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் 5.3.1.ஆம் பிரிவையும் 2/97 (iii) சம்பள மாற்றத்தையும் சரியாக நடைமுறைப் படுத்தாமையால் 2 சம்பள ஏற்றங்களை இழந்து, 1994.08.01ஆம் திகதி முதல் 1999.11.11ஆம் திகதி வரை ஒரே சம்பளத்தில் இருந்த இவர்களுக்கு 7/2003 ஆம் இலக்க பொ.நி.சு. பிரகாரம் 1997,1998, 1999 ஆகிய மூன்று வருடங்களுக்குரிய 3 சம்பள் ஏற்றங்களை கிடைக்காமற் செய்திருப்பது எவ்வாறு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்டவர்களை விட மூன்று ஆண்டுகளின் பின்னர் பதவியுயர்வு பெற்ற, மூப்புரிமையில் 3 ஆண்டுகள் குறைந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் சம்பளத்தைவிட 3 சம்பள ஏற்றங்கள் உயர்வாக வைக்கப்பட்டிருப்பது எந்த அடிப்படையில்,

(ii) இது 11/94 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தை மீறி மூப்புரிமையை அலட்சியப் படுத்தியதாக அமையாதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0358 / '09

4.

கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் உறவுகள், மனித வலு அமைச்சின் கீழ் மாவட்ட தொழில் அலுவலகங்கங்களில் நிறுவப்பட்டுள்ள "ரெகியா பியஸ" நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவற்றின் மூலம் வெளிநாட்டு தெரழில்களுக்கு அனுப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முக பரீட்சைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி நேர்முக பரீட்சைகளில் கலந்து கொண்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) இவர்களில் வெளிநாட்டு தொழில்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) இவர்களின் பெயர் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு தொழிலுக்காக ஒருவரிடமிருந்து அறவிட்ட பணம் எவ்வளவு,

(ii) ஏற்கனவே பணம் செலுத்தியுள்ளவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை “ஜொப்ஸ் நெட்” நிறுவனம் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா,

(ii) அதன் முகாமையாளர்கள், பணிப்பாளர்கள் சபையும் பதிவு எண்ணும் யாது,

(iii) அது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டிருந்தால் பதிவு எண் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0478 / ’09

5.

கௌரவ பேமசிறி மானகே,— மீள் குடியமர்த்துகை , அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மிக நீண்ட காலமாக கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசித்து வந்த பெரும் அளவிலான மீன்பிடித் தொழிலாளர்கள் அப் பிரதேசத்திலிருந்து பயங்கரவாதிகளால் விரட்டப்பட்டுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) அவர்களது வீடுகள், மீன்பிடி படகுகள், உபகரணங்கள் ஆகியவை அப் பயங்கரவாதிகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) தென் பகுதிக்கு வந்துள்ள மேற்படி மீனவ குடும்பங்கள் அப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட வேண்டுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி ‘ (ஆ) (ii) ‘ வினாவுக்கான பதில் ‘ஆம் ‘ எனில் அது சம்பந்தமாக இற்றை வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்னவென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0488 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iv) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்,

(v) வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களாக மாறும் பொருட்டு இவர்களிடமிருந்த அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்த வர்த்தக நிலையங்களை பேணிவருகின்றவர்கள் அவற்றின் ஆரம்ப உரிமையாளர்களா என்பதையும்,

(ii) எவரேனுமொருவருக்குச் சாட்டப்பட்டிருந்தால் அது யாரால் யாருக்கு என்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய மாதாந்த குத்தகைத் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) குத்தகை தொகை யாரால் அறவிடப்படுகின்றதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0500 / '09

7.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மஹிந்த சிந்தனை" கொள்கைப் பிரகடனத்தின் 48 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு, சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பாரிய அளவிலான கைத்தொழிற்சாலையொன்று உருவாகும் வகையில் 300 புதிய கைத்தொழிற்சாலைகளை தாபிக்கும் திட்டத்தின் கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கைத்தொழிற்சாலைகளும் அவை நிர்மாணிக்கப்பட்டள்ள பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0511 / '09

8.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கா/தவலம பிரதேச செயலாளர் பிரிவில் பனங்கல கங்காராம விஹாரைக்கு அருகில் கிங்கங்கையை கடப்பதற்காக பாலமொன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்போதைய பிரதமரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமாக இருந்த தற்போதைய ஜனாதிபதி அதற்கான அடிக்கல்லை நாட்டினார் என்பதையும்,

(ii) அந்த அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது 05 வருடங்கள் கடந்துள்ளது என்பதையும்,

(iii) கங்காராம விஹாரையில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் கிராமத்தவர்களுக்கு ஆற்றை கடப்பதற்கும் பனங்கல மகாபோதி வித்தியால யத்துக்கும் வரும் பாடசாலை மாணவர்களுக்கு ஆற்றை கடப்பதற்கும் இந்த பாலம் தேவை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இப்பாலத்தின் நிர்மாணப்பணிகள் எக்கால கட்டத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533 / '09

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஜூலை 01, 2002 ஜூலை 01, 1995 ஜூலை 01 ஆகிய திகதிகளில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் இயங்கிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இன்றைய தினத்திலுள்ளவாறு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலு முள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகையை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வைத்தியர் — நோயாளிகள் விகிதம் என்ன என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களாக ஆண்டுதோறும் வைத்தியசாலைகளுக்கு அனுமதி பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0128 / '09

10.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயிற்சி பெற்ற ஊழியர்களை வெளிநாட்டுத் தொழில்களுக்கு ஆற்றுப்படுத்து வதற்கான அரச வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா,

(ii) அவ்வாறாயின், 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் எத்தனை பேர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்,

(iii) இது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கென வெளியேறுபவர்களில் எத்தனை சதவீதத்தினர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தாதிமார்களைப் பயிற்றுவித்து வெளிநாட்டு வேலைவைாய்ப்புக்கு ஆற்றுப் படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டில் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறான பயிற்சி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அதற்கென எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது,

(ii) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வெவ்வேறாக பயிற்சித் தாதிமார்கள் எத்தனை பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள் ளனர்,

(iii) அந் நாடுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0362 / '09

11.

கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கேகாலை மாவட்டத்திற்கு இம்முறை சிறுபோகத்திற்காக வழங்கப்படுகிற உர மானியத்தின் பொருட்டு அனுப்பல் கட்டளை வழங்கப்பட்டுள்ள உர வகைகளின் அளவு எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பயிர் செய்து சுமார் ஒரு மாதம் கழிந்தும் இன்னும் கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு மேற்படி மானிய உரம் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறு கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு உரம் கிடைப்பது தாமதமான தற்கான காரணம் யாது,

(ii) கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு உரம் ஏற்றிச் செல்வதற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின் அது எப்போது,

(iii) உரம் ஏற்றிச் செல்லல் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது,

(iv) அந்நிறுவனத்தின் பெயர், முகவரி யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு மானிய உரம் கிடைக்காததன் காரணமாக ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளிலிருந்து ஆகக் கூடிய பயனைப் பெறுவதற்காகவும் மேற்கொள்ளப் படும் நடவடிக்கையாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0480 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் செயற்படும் விசாரணைப் பிரிவு எப்போது நிறுவப்பட்டதென்பதையும்,

(ii) ஆரம்பம் முதல் இற்றைவரை விசாரணைப் பிரிவிற்கு கிடைத்துள்ள பொது மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி முறைப்பாடுகளில் இற்றைவரை விசாரணைகள் நிறைவுபெற்றுள்ள மற்றும் விசாரணைகள் இடம்பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) இற்றைவரை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விசாரணைக்குப் பின்னர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இற்றைவரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாத முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0534 / '09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஜுலை 1

2002 ஜுலை 1

1995 ஜுலை 1

ஆகிய தகதிகளில் மாகாண மட்டங்களிலும், தேசிய மட்டத்திலும் இயங்கிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இன்றைய தினத்திலுள்ளவாறு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலு முள்ள ஆசிரியர்களது எண்ணிக்கை எவ்வளவென்பதையும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகை எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) ஆசிரிய, மாணவ விகிதாசாரம் என்னவென்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த ஐந்து வருடங்களாக ஆண்டுதோறும் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0369 / '09

14.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி,

கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்படட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடைமுறைக்கணக்கின் மேலதிகப்பற்று எவ்வளவு,

(ii) தற்போது இக்கூட்டுறவுச் சங்கம் நடாத்தப்பட்டுவரும் பிரதான கட்டிடம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதா,

(iii) அது எந்த வங்கிக்கு என்ன காரணத்திற்காக,

(iv) இந்த ஈடு இப்பொழுது மீட்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சங்கத்தின் திருப்பிய காசோலைகளை மீண்டும் எழுதுவதனால் ஏற்படும் நட்டம் மாதாந்தம் எவ்வளவு என்பதை அவர்அறிவாரா?

(இ) கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் அதன் வைப்பாளர்பளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) சங்கத்துக்குச் சொந்தமாயிருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரிந்த 5 பணியாளர்களை வேறேதேனும் பணியில் ஈடுபடுத்தாமலுள்ளதுடன் இவர் களுக்கு மாதாந்தச் சம்பளம் மாத்திரம் வழங்கப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல் ஏன்?

0464 / '09

15.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்ற நகர சபைகள், பிரதேச சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் வருடங்களுக்கான பாதுகாப்பு வருமானம் மற்றும் பொது வருமானம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்கள் குறிப்பிட்ட வருடங்களில் அரசாங்க அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், கடன் வழங்கிய நிறுவனம், கடன் நிபந்தனை, பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகை மற்றும் அப்பணம் இடப்பட்டுள்ள கருத்திட்டம் தனித்தனியாக யாதென்பதையும் ,

(iii) ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனமும் வருடாந்தம் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை, கடன் தவணைத் தொகை மற்றும் வட்டி தனித் தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0481/ '09

16.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004, 2005, 2006, 2007, மற்றும் 2008 ஆகிய வருடங்களில் அரச வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் ரூபாய் மில்லியன்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வருடங்களில் அரச வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் மொத்த வருமானத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்,

(ii) ஒப்பீட்டு ரீதியில் வரியல்லா வருமானத்தை விட வரி வருமானம் உயர்வடைவதற்கான காரணம் யாதென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட வரிச் சட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சர்,— தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— தேர்தல்களில் வாக்களிப்பதற்காக முற்றாகக் கட்புல வலிமையிழந்த ஓர் ஆளுடன் ஆளொருவர் உடன்செல்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தையும் அத்துடன் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தையும் திருத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) ,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) ,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்

தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2009 ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

5.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,__ சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"தற்காப்பு கலைகளுக்கான நிறுவகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

6.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,__ சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கை யெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்

சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*4.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*7.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 123, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து எழுநூற்றி பதினைந்து மில்லியன் (ரூபா 1,715,000,000) ரூபாவிற்கும் மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 123 | — | நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி | ரூபா |

அமைச்சு

நிகழ்ச்சித்திட்டம் : 02 — அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| | | |
|---|---|---|
| ஆக்கப்பொருட் செலவு | ரூ. | 1,715,000,000 |
| | | ----------------- |
| | ரூ. | 1,715,000,000 |
| | | =========== |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 13 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 20,780,903,938.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு

மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*28.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச்

சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*29.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*30.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

*31.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*32.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2006,— 1957 ஆம்

ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*33.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*34.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*35.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

36.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம்

மதிப்பீடு.

37.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகியதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப் பொறுப்புச்சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

44.

கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0116 /'09

1.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 05 எனக் கொள்ளப்படுகின்ற அநுராதபுரம், பொலநறுவை, வவுனியா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008, 2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0117 / '09

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 03 எனக் கொள்ளப்படுகின்ற குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008,2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப் பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0462 / '09

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரினால் வரிச் சலுகையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வாகன இறக்குமதிக்கான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர்கள், வாகனத்தின் வகை மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி வாகனங்களின் உற்பத்திப் பெறுமதி மற்றும் தற்போதைய சந்தைப் பெறுமதி யாதென்பதையும் ,

(ii) இதன் மூலம் எமது நாட்டுக்கு கிடைத்த வரி வருமானம் எவ்வள வென்பதையும் ,

(iii) இழந்துள்ள வரி வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?